# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1611 - 2009 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2009.07.17

*1611 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 878 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 878 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – | ஏல விற்பனைகள் | 881 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | – | நானாவித அறிவித்தல்கள் | – |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வரராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2009, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2009**

இரண்டு வருட காலத்திற்கு வெலிக்கேபொல I வெலிக்கேபொல II மற்றும் கலவான பகுதிகளில் பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வது தொடர்பாக கேள்வி விலை கோரல்கள் சப்பிரகமுவ மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தில் 30.07.2009 பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விவிலை கோரல்கள் அதே தினம் பிற்பகல் 2.05 மணிக்கு திறக்கப்படும். இதன்பொருட்டு விலை கோரல் பற்றிய விபரங்களும் விண்ணப்பப்படிவமும் குறித்த மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம் மற்றும் மாவட்ட நில அளவை அலுவலகம் ஆகியவற்றில் அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத பணமான ரூபா 250 ஐச் செலுத்தி 29.07.2009 நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளமுடியும்.

முத்திரையிடப்பட்ட விலை கோரல்கள் விண்ணப்பம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டு நேரடியாக கையளிக்கமுடியும் அல்லது பதிவுத்தபாலில் குறித்த மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு 30.07.2009 பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு தேவையான விபரங்களுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் அலுவலகம்,
250, கிருல வீதி,
கொழும்பு 05.

7-541

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் சட்டத்தின்படி 9 ஆம் தொகுதிக்கேற்ப இந்நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டுள்ளதை இத்தால் அறிவிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | ஏசியா ஸ்போர்ட்ஸ் மெனேஜ்மன்ட் (பிரைவேட்) லிமிட்டெட். |
| நிறுவனத்தின் இலக்கம் | : | பி. வி. 68060 |
| பதிவு செய்த முகவரி | : | இல. 65, சிரிபா வீதி, கொழும்பு 05 |
| செயலாளர் | : | சமன் சேனாதீர (சட்டத்தரணி) |

7-358

**விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தலுக்கான அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் லுனுவில ஜயமாவத்தையில் வசிக்கும் வர்ணகுலசூரிய பிரியங்கா ரூத் திஸேரா ஆகிய நான் இத்தால் தெரியப்படுத்துவது என்னவென்றால் 2008 ஆம் ஆண்டு யூன் 12 ஆந் திகதி புத்தளத்தில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு பீ. என். குணவர்தன அவர்களூடாக 2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 1 ஆந் திகதியிடப்பட்ட விசேட அட்டோர்ணித்தத்துவம் இல. 13,387 மூலம் என்னால் நியமிக்கப்பட்ட மூனமல்தெனிய கம்புராபொல வசிக்கும் ஹேரத் முதியான்சேலாகே உபாலி ஹேரத் என்பவரை எனது வழக்கறிஞராக நியமித்ததை 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17 ஆந் திகதி அன்று இரத்துச் செய்கிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். மேலும் மேற்குறிப்பிட்ட 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 17 ஆந் திகதி அன்றிலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட வழக்கறிஞரால் எனக்காக மேற்கொள்ளப்படும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் நான் பொறிப்பாளியில்லை என்பதை இத்தால் எல்லோருக்கும் அறியத் தருகின்றேன்.

வர்ணகுலசூரிய பிரியங்கா ரூத் திஸேரா.

7-359

**விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்**

கம்பஹா மாவட்ட பகிரங்க நொத்தாரிசு திருமதி கமகே தீபானி சுதர்மா விஜேசேக்கரவினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 4201 மற்றும் 2008.11.05 ஆந் திகதிய விசேட அட்டோர்னி தத்துவத்தின் மூலம் அதன் அட்டோர்னி தத்துவக்காரரான நாத்தாண்டிய, வெலிபன்ன,

கஹமுல்ல, பன்னரே, 'சம்பத்' இல. 135 எனும் முகவரியில் வசிக்கும் தொட்டவத்தகே சமிந்த குமார தொட்டவத்த (தேசிய அடையாள அட்டை இல. 773044341V) ஆகிய நான் கொழும்பு 14, கிராண்ட்பாஸ், பிரிட்டோபபாபுள்ளே பிளேஸ், இல. 182, முகவரியில் வசிக்கும் செல்லையா, மஹேந்திரன் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 730893523V) ஆகிய நம் இருவரால் கம்பஹா மாவட்ட கிரிபத்கொட, விட்டோ மாவத்த, இல. 275/6, முகவரியில் வசிக்கும் தொன் சாலிய சம்பத் குமார் வெஹெரகம (தேசிய அடையாள அட்டை இலக்கம் 732460756V) என்பவரை அட்டோர்ணி தத்துவக்காரராக நியமித்துள்ளதுடன், மேற்படி அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குவதாக இலங்கை குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறோம்.

தொட்டவத்தே சமிந்தகுமார தொட்டவத்த
மற்றும் செல்லையா மஹேந்திரன்.

7-370

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9(1) பிரிவின் கீழான அறிவித்தல்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | பபல் இவென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட். |
| கம்பனியின் இலக்கம் | : | பி. வி. 67742 |
| கூட்டிணைப்பு திகதி | : | 07.05.2009 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : | பபல் இவென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் 30/63H லோங்டன் பிளேஸ், கொழும்பு - 07 |

பிஸ்னஸ் மேட் (பிரைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.

7 - 375

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9(1) பிரிவின் கீழான அறிவித்தல்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | G - எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட். |
| கம்பனியின் இலக்கம் | : | பி. வி. 68054 |
| கூட்டிணைப்பு திகதி | : | 09.06.2009 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : | G - எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட். 45, பிரேபுறூக் ஸ்டிரீட், கொழும்பு - 2. |

பிஸ்னஸ் மேட் (பிரைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.

7 - 376

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9(1) பிரிவின் கீழான அறிவித்தல்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | லங்கா எடியுகேசன் என்ட் ரிசேர்ச் நெட்வேக் |
| கம்பனியின் இலக்கம் | : | GA 2269 |
| பதிவு செய்யப்பட்ட விலாசம் | : | 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 |

கம்பனி செயலாளர்.

7 - 390

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, குவாரி ரோட் இல. 214/5 ஐச் சேர்ந்த ஹல்நெத்தி சதுர மனோ சில்வா ஆகிய நான் நொத்தாரிசு ஜீ. ஆர். ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1988.07.28 ஆந் திகதியிடப்பட்ட எச். சீ. பென்ஜமின் சில்வாவுக்கு வழங்கப்பட்ட இல. 02 அட்டோர்ணித் தத்துவத்தை 2009.06.03 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இவ் அறிவித்தல் மூலம் சகலருக்கும் அறிவித்துக்கொள்கிநேன்.

ஹல்நெத்தி சதுர மனோ சில்வா.

7-418

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 26.05.2009 அன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | கொன்வேர்ஸ் சொலுசன்ஸ் லிமிட்டெட். |
| கம்பனியின் இலக்கம் | : | பிபீ 3710 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 104, கித்துள்வத்த றோட், கொழும்பு 08 |

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 04,
இல. 02 காசல் லேன்,
கொழும்பு - 04.

7 - 424

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 04.06.2009 அன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | குளோபல் ஸ்போர்ட்ஸ் டெக்நொலர்ஜிஸ் (பிரை) லிமிட்டெட். |

| | | |
|---|---|---|
| கம்பனியின் இலக்கம் | : | பிவீ 67992 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | கட்டம் II, ரிங் றோட், கட்டுநாயக்க ஏற்றுமதி உற்பத்தி வலையம், கட்டுநாயக்க. |

கம்பனி செயலாளர்கள்.

லெவல் 04,
இல. 02 காசல் லேன்,
கொழும்பு 04,
2009, யூன்

7 - 425

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்த கம்பனி 09.06.2009 அன்று கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | நுவநெச (பிரை) லிமிட்டெட். |
| கம்பனியின் இலக்கம் | : | பிவீ 68051 |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 267, பன்னிபிட்டிய றோட், பெலவத்தை, பத்தரமுல்ல. |

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ் (பிரை) லிமிடட்,
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 04,
இல. 02 காசல் லேன்,
கொழும்பு 04.

7 - 426

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | எடிபிக் இன்ஸ்ரிடியுட் ஒப் எக்ஸ்டென்டட் ஸ்டடீஸ் (பிரை) லிமிட்டெட். |
| கம்பனியின் பதிவு இலக்கம் | : | பிவீ 67834 |
| பதிவுசெய்த திகதி | : | 18.05.2009 |
| கம்பனியின் விலாசம் | : | இல. 30, ஹில்டன் பிளேஸ், கொழும்பு 04 |

ஜே என்ட் ஏ மெனேஜ்மன்ட்
சிஸ்டம்ஸ் (பிரை) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி : 0114614887

7 - 435

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | அம்பிகா கொன்ஸ்டரக்சன் கம்பனி (பிரை) லிமிட்டெட். |
| கம்பனியின் பதிவு இலக்கம் | : | பிவீ 67898 |
| பதிவுசெய்த திகதி | : | 28.05.2009 |
| கம்பனியின் விலாசம் | : | இல. 15, கதிர்காமதம்பி வீதி, செல்வநாயகபுரம், திருகோணமலை |

ஜே என்ட் ஏ மெனேஜ்மன்ட்
சிஸ்டம்ஸ் (பிரை) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி : 0114614887

7-436

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின் பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | சாரா ரெக்னொலஜி இன்டர்நெசனல் (பிரை) லிமிட்டெட். |
| கம்பனியின் பதிவு இலக்கம் | : | பிவீ 68076 |
| பதிவுசெய்த திகதி | : | 10.06.2009 |
| கம்பனியின் விலாசம் | : | இல. 131, காலி வீதி, தெஹிவளை |

ஜே என்ட் ஏ மெனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (பிரை) லிமிடட்,
செயலாளர்கள்.

தொலைபேசி : 0114614887

7 - 437

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்

PQ 98 எனும் பதிவிலக்கத்தைக் கொண்ட "ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தற லிமிடட்" எனும் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 29 ஆம் பிரிவிற்கமைய 01.06.2009 முதல் தனியார் நிறுவனமாக மாற்றமடைந்துள்ளதுடன் அக்கம்பனியின் பெயர் அத்திகதி முதல் ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தற (பிறைவேற்) லிமிடட் என மாற்றமடைந்துள்ளது.

இக்கம்பனியின் பிரதான வியாபாரஸ்தல முகவரி 8 ஆம் மாடி எய்ற்கின் ஸ்பென்ஸ் டவர் II, இல. 315, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02

எய்ற்கின் ஸ்பென்ஸ் கோப்பரேற் பினான்ஸ் (பிறைவேட்) லிமிடட்,
செயலாளர்கள்.

7 - 538

### கம்பனியின் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) பிரிவுக்கமைய கீழ்க் குறிப்பிட்டுள்ள கம்பனி பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாகக் கூட்டிணைக்கப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.*

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | ஒன்லைன் சொலுசன்ஸ் (பிரை) லிமிட்டெட். |
| கம்பனியின் பதிவு இலக்கம் | : | பிவீ 68196 |
| பதிவுசெய்த திகதி | : | 23.06.2009 |
| பதிவுசெய்யப்பட்ட கம்பனியின் விலாசம் | : | இல. 78, சி. பி. டி சில்வா மாவத்தை, கல்டெமுல்ல மொரட்டுவ. |

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கமைய,

மன்செக் சேவிசஸ் (பிரை) லிமிடட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 6ஏ, டெஸ்சிவில்லா அவனியு,
பம்பலப்பிட்டி,
கொழும்பு 04.
தொலைபேசி இல. :2597910/2597911

7 - 559

### பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) விதிகளின் கீழ் காணும் கம்பனி 2009, சனவரி 29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.*

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | : | சவ்த் ஏசியன் இன்டநெசனல் இன்ஸ்டிடியுட் ஒப் ஹயர் எடியுகேசன் (பிரை) லிமிட்டெட். |
| பதிவு செய்யப்பட்ட இலக்கம் | : | பிவீ 66898 |
| பதிவு செய்யப்பட்ட விலாசம் | : | இல. 705 2/1, ஹை லெவல் றோட், கங்கொடவில, நுகேகொட, சிறீலங்கா. |

7 - 567

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

யூஎஸ்ஏ கெலிபோனியா நோத்றிஜ் இலக்கம் 128 பல்போஆ புலவாட், இலக்கம் 9018 என்னும் விலாசத்தில் வசிக்கும் ஜீ. ஏ. இந்திக ஜயரத்ன ஆகிய நான் தெரிவித்துக்கொள்வது என்னவெனில் என்னால் ஸ்ரீ லங்கா மஹரகம, பமுனுவ பாதை, இலக்கம் 123/1 ல் வதியும் ஜீ. ஆரச்சிகே ஜயரத்ன என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஹால கே. அனான் 21.06.2003 எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட வழங்கிய தத்துவ பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக ஆக்குகின்றேன். குறிப்பிட்ட தத்துவப் பத்திரம் பத்தரமுல்ல பெரும் பகுதி பதிவுக் காரியாலத்தில் தத்துவ பத்திரம் பதிவு செய்யும் பகுதி 7 ஆம் புத்தகத்தில் 94 ஆம் பக்கத்தில் நாட் பதிவு இலக்கம் 3974 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜீ. ஏ. இந்திக ஜயரத்ன.

7 - 522

---

## ஏல விற்பனைகள்

### செலான் வங்கி PLC - ஹோமாகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட சரத்துக்கள்) 4 ஆம் பிரிவின் விற்பனை*

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் (ஹோமாகம பதிவுப் பிரிவிற்குள்) ஹேவாகம் கோரளையின் பல்லேபத்துவிலுள்ள ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹபரகட கிராமத்தில் அமைந்துள்ள கட்டடங்கள் மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் தெல்கஹவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் (அனுமதிபெற்ற நில அளவையாளர் பீ. எச். எம். எல். பிரேமசந்திர என்பவரால் தயாரிக்கப்பட்ட 10.01.2001 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 1852 இல் துண்டு 3 இன் உப பிரிவு என்ற வகையில்) அனுமதிபெற்ற நில அளவையாளர் பி. எச். எல். பிரேமசந்திர என்பவரால் தயாரிக்கப்பட்ட 31.01.2005 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 4754 அனைத்தும் பிரிக்கப்பட்டு துண்டு 3ஏ என அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணி மேற்கூறப் பட்டுள்ள நிலவரைப்பட இல. 4754 இற்கமைய பதினொரு பேர்ச் (0ஏ.0றூ.11பே) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது ஏலவிற்பனை*** *("கடன்பட்டோர்" என்ற வகையில் ஹோமாகமவைச் சேர்ந்த குருப்பு ஆரச்சிகே சமின்த பிரியதர்ஷன குருப்பு ஆரச்சி என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி PLC யிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2009, ஓகத்து 07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** கொடகம சந்தியிலிருந்து அத்துருகிரிய வீதி ஊடாக ஹபரகடசந்திவரை சுமார் மூன்று கிலோ மீற்றர் சென்று ரனால வீதிக்கு வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 1.6 கிலோ மீற்றர் சென்று வலது புறமாகத் திரும்பி தொடர்ந்து ஜல்தர வீதி ஊடாக சுமார் 150 மீற்றர் தூரம் சென்று குறிப்பிட்ட காணியை அடையலாம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 28.11.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 22.11.2008 ஆந் திகதியில் "டெயிலி மிரர்" மற்றும் "லங்கா தீப" பத்திரிகைகளையும் 18.12.2008 ஆந் திகதிய "வீரகேசரி" பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்காணும் தொகைகளைச் செலுத்த வேண்டியுள்ளனர் :-

(1) கொள்முதல் விலையின் பத்து வீதம் 10% ; (2) உள்ளூர் விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கும் மற்றைய அரசாங்க அல்லது உள்ளூர் அதிகார சபை வரி விதிகளுக்கு அமைய ஒரு வீதம் (1%) உள்ளூர் விற்பனை வரியாக செலுத்தப்படவேண்டும் ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் 2.5% ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500/- ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி PLC இல் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும் பு 3, காலி வீதி, இல. 90, செலிங்கோ செலான் கோபுரம், செலான் வங்கி PLC, உதவி பொது முகாமையாளர் (சட்டம்), இடமிருந்து பெற்றுக்கொள்ளவும், பார்வையிடவும் முடியும். தொ.பே. : 2456285, 2456263, 2456284

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரரும்
நீதிமன்ற ஆணையாளரும்,
விலைமதிப்பிடுநர்.

"ரி அன்ட் எச் ஒக்சன்",
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி : 2696155, 0602068185 மற்றும் 2572940.

7-433

---

## மக்கள் வங்கி - காலி மஹவீதி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தி யமைக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் திருத்தமாக 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி என்னால் இங்கு கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் 2009. 08. 11 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்**.- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே காலி கடவத் சதரைக்குள் கின்தொட்ட குருந்துவத்தையில் அமைந்துள்ள ஏ. ஏ. எச். உம்மு ஸாபியாவுக்குரிய அல்லது கனாபதின்சிவத்த என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட 7-1 இல் 7-13 என்ற பேர்ச்சஸ் ஏழும் தசம் சைபரும் நான்கும் (0ஏ.0றூ.7.04பே.) மிகப்பெரிய காணியும் அங்குள்ள பயிர்ச்செய்கை கட்டிடங்கள் உட்பட அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு** .- 26.12.2008 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமான பத்திரிகையிலும், 16.03.2009 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- காலி, கொழும்பு பிரதான வீதியில் கின்தொட்ட பாலத்திற்கு அருகே உள்ள கின்தொட்ட - வக்வெல்ல வீதியில் சுமார் 200 மீற்றர் தூரத்தில் ஓட்டுப்பலகை தொழிற்சாலைக்கருகே வலப்பக்கமாக இருக்கும் அப்துல் அஸீஸ் மாவத்தையின் சுமார் மீற்றர் 250 அளவு செல்ல, பாதையின் வலப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**:- வெற்றி பெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ் கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரக்கு 1% ;
(3) ஏல விற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500/- ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "காலி, பஹல டிக்சன் வீதி, இல. 22 என்ற நிலையத்தில் அமைந்துள்ள றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர், அவர்களுக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 091-2232311, 2223564, 2234171, 2234174, பெக்ஸ் இல. 091 - 2232230

மேற்குறிப்பீட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% ஐ திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைகோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதிவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல 041 - 2228731, 071-4438516

7-438

---

## மக்கள் வங்கி - ஊரகஸ்மன் ஹன்திய கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தி யமைக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி என்னால் இங்கு கீழ்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தில் 2009. 08. 07 ஆந் திகதி மு. ப. 11.00 க்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

***ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்.*** *- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே வெல்லபடபத்துவையில் அமைந்துள்ள கரன்தெனிய தெற்கு மங்கலகமயில் அமைந்துள்ள பரகஹவத்த என்ற காணியின் திரு. எஸ். பீ. வீரசிங்ஹ என்ற அதிகாரம்பெற்ற அளவையாளரினால் 2006.04.06 ஆந் திகதிக்குரிய இல. 2306 என்ற வரைபடத்திற்கிணங்க இல. 18125 என்ற இரண்டு றூட் பதினெட்டு பேர்ச்சஸ் (0ஏ.2றூ.18பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் பயிர்ச்செய்கை, கட்டிடம் உட்பட அனைத்துமாகும்.*

***மேலதிக விபரங்களுக்கு.*** *- 30.01.2009 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானி பத்திரிகையிலும், 16.03.2009 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியை கவனிக்க.*

***சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.*** *- காலி, கொழும்பு வீதியில் அம்பலன்கொட நகரத்தின் எல்பிடிய வழியாக மஹஏதண்ட சந்தியிலிருந்து இடப்பக்கமாக ஊரகஸ்மன்ஹன்தி வழியாக சுமார் 2 1/2 மைல் செல்ல தெதிரிய பிரதேசத்தின் அசோகா ராமையின் பன்சலையை தாண்டியதும் வலப்பக்கமாக உள்ள வழியாக சுமார் 200 மீற்றர் அளவு செல்ல பாதையின் இடப்பக்கமாக எல்லையாக இச்சொத்துக்கள் அமைந்திருக்கும்.*

***கொடுப்பனவு செலுத்தும் முறை:*** *- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்க் கண்டபடி பணமாக செலுத்தல் வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையில் 10% ;*
*(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;*
*(3) ஏல விற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2% ;*
*(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;*
*(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணம் இருப்பின் அப்பணமும் ;*
*(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.*

*கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "காலி, பஹல டிக்சன் வீதி, இல. 22 என்ற நிலையத்தில் அமைந்துள்ள றுஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர், அவர்களுக்கு செலுத்தவேண்டும். தொலைபேசி இல. 091-2232311, 2223564, 2234171, 2234174, பெக்ஸ் இல. 091 - 2232230.*

*மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% ஐ திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.*

*உரிமைகோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.*

*ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதிவான்),*
*அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,*
*நீதிமன்ற ஆணையாளரும் மதிப்பீட்டாளரும்.*

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
*தொலைபேசி இல 041 - 2228731, 071-4438516*

*7-440*

## DFCC வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***21439 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, தாசிய பத்து, தொரணகொட கிராமத்தில் அமைந்துள்ள, தவட்டகஹவத்த என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் K. K. A. S. பத்மினி அவர்களால் வரையப்பட்ட, *2003* ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதியிடப்பட்ட *3663* ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28பே. அல்லது 0.0708 ஹெக்டயர்)***

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். ஏ. என். டபிள்யு. ராஜகருண அவர்களால் 2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 21439 ஆம் இலக்க பிணை உறுதி மீதான வருமதியான கொடுப்பனவு தவணை தவறியதால், உடுகம்பொலயைச் சேர்ந்த கஹந்தவ அப்புஹாமிலாகே தினேஷ் சஞ்ஜீவ குலரத்ன அவர்களால் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 34,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000 தரச் சான்றிதழ்பெற்ற ஒரேயொரு
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ ஃபக்ஸ் : 081-2224371 | தொலைபேசி/ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

7-454

---

### பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

#### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் பி. சின்னத்தம்பி அவர்களால் வரையப்பட்ட 1990 ஆம் ஆண்டின் யூன் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 2798 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3040 மற்றும் 3041 எனக் குறிக்கப்பட்ட (சுவடு 129 இன் 261 ஆவது மடிவுப்புறை வெள்ளவத்தை 02 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட வரைபடத்தில், துண்டு 1824 மீள்அளவை செய்யப்பட்டு துண்டுகளாக்கப்பட்ட) பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டது மான, மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பாமன்கடை மேற்கு, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 29 கொழும்பு மாநகர சபை எல்லைக் குட்பட்ட நுககஹ வத்த என அழைக்கப்படும் காணி அதில் அமைந்துள்ள கட்டடம் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக***

**(காணியின் விஸ்தீரணம் : துண்டு 3040 : 0ஏ. 0றூ. 9.67பே.
துண்டு 3041 : 0ஏ. 0றூ. 8.67பே.)**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 6 மற்றும் 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட 1954 மற்றும் 1956 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் லேண்ட் மார்க் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சிக்கு (முன்னர் பான் ஏஷியா பாங் லிமிட்டெட் என்றும் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் என்றும் அழைக்கப்பட்டு வந்தது) அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

**காணிக்குச் செல்லும் வழி.**- வெள்ளவத்தை சந்தியிலிருந்து (சமிக்ஞை விளக்கு சந்தி) காலி வீதி ஊடாக தெஹிவளை நோக்கி வெள்ளவத்தை கொமர்ஷல் வங்கி வரை சுமார் 250 மீற்றர் தூரம் வரை சென்று இடதுபுறம் உருத்திரா மாவத்தையில் 125 மீற்றர் வரை பயணஞ்செய்தால் இந்த காணியைச் சென்றடையலாம். இது உருத்திரா மாவத்தையில் இடதுபுறத்தில் அமைந்துள்ளது.

பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% ;
(4) மொத்த விளம்பரச் செலவில் 50% 90,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000 ;

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- தயவுசெய்து 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெளியான "சிலோன் டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும், 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்கள், உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சி, 450, காலி வீதி, கொழும்பு 3" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தொலைபேசி இலக்கங்கள் : 2565573, 2565565

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்பெற்ற ஐஎஸ்ஓ 9001 : 2000 இலக்க தராதரமுடைய ஒரேயொரு
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் ரோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 011-2585408 |
| தொலைபேசி/ஃபக்ஸ் : 081-2224371 | தொலைபேசி/ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

7-455

---

### மக்கள் வங்கி – பெல்மடுல்லைக் கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29஥ என்னும் பிரிவின் கீழ் விற்பனை*

**சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோறளை மெதபத்துவை கிரிபத்கலையில் அமைந்துள்ள கொன்கஹதொலஹேன எனும் கொன்கஹதொலவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். தியகம அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 2204 உடன் 17.06.1990 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறுபடுத்தப்பட்ட லொட் இல. 01 கொண்ட பகுதிக்கு எல்லைகள் வடகிழக்கிற்கு : லொட் 02 உம் ; தென்கிழக்கிற்கு : கோன்கஹ அருவியும் ; தென்மேற்கிற்கு : பி. வி. நந்தசேனாவுக்குச் சொந்தமான கோன்கஹ அருவியின் சேனையும் ; வடமேற்கிற்கு : கிரிபத்கலையிலிருந்து பெல்மடுல்ல வரை ஓடும் பாதையும் எனும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பேர்ச்சஸ் இருபத்தி நாலு (00ஏ.00றூ. 24பே.) விசாலமான காணியும் அதற்குச் சொந்தமான கட்டிடங்கள், மரம்மட்டைகள், பழவர்க்கங்கள் ஆகிய சகலதுமாகும். இந்தக் காணி தற்போது இரத்தினபுரி காணிப் பதிவுக் காரியாலயத்தில் பீ. 788/59 பத்திருவின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. பிரமாணம் (0ஏ.0றூ.24பே.) ஏலவிற்பனை**

மக்கள் வங்கிகளினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009.08.04 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2009.03.13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.02.26 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கும் ஏலவிற்பனைத் தீர்மான அறிவித்தலுக்கு கவனத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசித்தல்.**- பெல்மடுல்ல நகரத்திலிருந்து எம்பிலிபிடிய பாதையில் கிரிபத்கலப்பாதையில் 3 1/2 கி. மீ. அளவு போனதன் பின்பு பில்ல சந்தியைத் தாண்டும் போது சந்திக்கும் மலைக்குன்றின் மேல் இடதுபக்கம் அமைந்துள்ள வீடும் ஆதனமும் பாதைக்கு எல்லைகளாக அமைந்திருக்கின்றது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலத்தின் இறுதியில் வெற்றியான கொள்வனவாளரால் கீழ்க்காணும் விதமாக பணத்தால் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்விலையின் 10% ; (2) உள்ளூராட்சி அதிகார சபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகாரசபைக்கு 1% ; (3) ஏலத்தின் கமிஷன் ஆக விற்பனை விலையின் 2 1/2% ம் ; (4) குமாஸ்தாவினதும் அறிவிப்பாளரினதும் கட்டணமாக ரூபா 500 ; (5) விற்பனை செலவு ஏனைய கட்டணமிருப்பின் அப்பணம் ; (6) விற்பனை சான்றிதழுக்குரிய முத்திரைக் கட்டணம்.

கொள்விலையின் மிகுதி 90 % விற்பனை திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 54, புதிய நகர், இரத்தினபுரி, பிராந்திய முகாமையாளருக்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 045-2223084, 045-2230818
பெக்ஸ் இல. : 045-2222711.

உரிமை உறுதியையும் ஏனைய உரிய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக் குள் செலுத்தப்படாவிட்டால் தற்போதைக்கே செலுத்தி யிருக்கும் கொள்விலையின் 10% ஐப்பணம் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கும் மீண்டும் ஆதனத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஏ. எஸ். லியனகே,
நீதிமன்ற ஆணையாளர், அதிகாரம்பெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர், சத்தியம் செய்த
மொழிபெயர்ப்பாளர்.
தொலைபேசி இல. : 2703478
0777459823

இல. 228 ஏ,
வலவ்வத்தை, கெஸ்பாவ,
பிலியந்தலை.

7-483

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி - ஹோமாகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் பிகியு 116) எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் 1990 ஆம் ஆண்டின் கீழ்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை 18 ஆந் திகதி ஓகத்து மாதம் 2009 காலை 11.30 மணிக்கு. அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்படும்.

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து ஹேவாகம கோரளையில் ஹோமாகம பிரதேச சபை எல்லையில் ஹோமாகம கிராமத்தில் அமைந்துள்ள கட்டுவனேவத்த என்ற காணியின் நில அளவையாளரின் பிஎச்பெரேராவின் 12.01.1990 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1317 இல் காணப்பட்ட லொட் 7 என்ற காணி துண்டு இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.12பே.) மற்றும் இக்காணியின் அமைந்துள்ள கட்டிடம், மரங்கள் எல்லாம் சேர்த்து ஏலவிற்பனை**

*(கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த சமரரத்தின முஹன்திரம்கே சந்தண மற்றும் அன்டுகொட எஹலப்ப கமகே மொனிக்கா மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2009.04.03 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் மற்றும் ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2009.07.17 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2009.07.17 ஆந் திகதியுடைய "திவயின" "த ஐலண்ட்"ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- குட்டுவன-கிரிவத்துடுவ ரோட் ஊடாக ஹோமாகம நகரம் வரை சென்று வலது பக்கம் திரும்பி நாராஹேன ரோட்டில் குலசிரி குமாரகே மாவத்தை ஊடாக ஒரு 200 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள தேவால ரோட் அல்லது அகரவிட்ட மாவத்தையில் ஒரு 100 மீற்றர் சென்று ஒரு 15 அடி பாதையில் சென்று காணியை அடையமுடியும்.

**கட்டணம் செலுத்தும் விதம் :**

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பிரதான காரியாலயத்தில் அல்லது ஹோமாகம கிளையில் செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு :

முகாமையாளர்,
கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி,
இல. 100, ஹயிலெவல் ரோட்,
ஹோமாகம.
தொலைபேசி இல. : 011-2895128-9, 011-2895126
பெக்ஸ் : 011-2895127

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
விலைமதிப்பிடுபவர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி/பெக்ஸ் இல. : 011-2445393

7-527

**கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ-நுவரெலியா கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு*

**மஹர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மஹர தலுபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள சியம்பலாகஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. குணதிலக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.04.04 ஆந் திகதிய 5437 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பரித்தெடுக்கப்பட்டு லொட் 2ஏ என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது 46.5 பேர்ச்சஸ் பரப்பளவானதாகும்**

**ஏல விற்பனை**

*(இவ்வாதனம் வீரசேக்கர முதியன்சேலாகே இந்திக துஷார என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பு-கண்டி பெருந்தெருவில் மஹர சந்திவரை வந்து இடதுபக்கமாக திரும்பி தலுபிட்டிய பாதையில் பிரவேசித்து சுமார் 1.6 கிலோ மீற்றர் தூரம் மிஹிது மாவத்தை வரை வரவும். பின்னர் இடதுபக்கமாக திரும்பி சுமார் 30 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இடதுபக்கமாக அமைந்துள்ளது. (புராண ஜயசுமனாராம பன்சலைக்கு மிகவும் அண்மையில்)

இவ்வாதனம் 2009.08.17 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.06.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.05.26 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2%, நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ தலைமை அலுவலகத்தில் அல்லது நுவரெலியா கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.– "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, 36, புத்த ஜயந்தி மாவத்தை, நுவரெலியா" என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 052-2223761, 2223763.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வடபுழுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974
தொலைநகல் இல. : 081-22110125.

7-533

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ-கம்பளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**கம்பளை நகரத்திற்கு மிகவும் அண்மித்த ரத்மல்கடுவ கிராமத்தில் அமைந்துள்ள சிங்ஹாபிட்டிய எஸ்ட்டேட் எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. எம். எஸ். பி. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.05.04 ஆந் திகதிய 5937 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் பயிர்களும் மற்றும் சகலதுமாகும். இது 40 பேர்ச்சஸ் பரப்பளவான பெறுமதிமிக்க வசிப்பிடத்துக்குப் பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

*(இவ்வாதனம் சமரகோன் பொடிஆரச்சிகே உபாலி பண்டாரகே என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- கம்பளை நகரத்திலிருந்து அம்புலுவாவ பாதையில் (மதகு இல. 26/1) சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் சென்று ஆராமய பாதைக்குத் திரும்பி இப்பாதையில் சுமார் 900 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது. இவ்வாதனம் 2009.08.18 ஆந் திகதி மு. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.06.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.05.29 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாச் செலுத்தப்படல் வேண்டும்.

கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2%, நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ தலைமை அலுவலகத்தில் அல்லது கம்பளை கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.– ''முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, 121, கண்டி வீதி, கம்பளை'' என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 081-2354132-3, 2354131.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வடபுழுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974
தொலைநகல் இல. : 081-2211025.

7-534

### இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.01.23 ஆந் திகதிய 1586 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2009.01.15 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'', ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விகார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த டி மற்றும் எச் ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன 2009.08.08 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் வோர்ட் இல. 09, கொச்சிக்கடை தெற்கில் பழைய சோனகத் தெருவில் அமைந்ததும் தற்சமயம் பழைய சோனகத் தெரு, வரிமதிப்பிலக்கம் 84 ஐக் கொண்டதும் முன்னர் வரிமதிப்பிலக்கம் 116 (மற்றும் இல. 110) ஐக் கொண்ட வீடும் தோட்டமும்- வடக்கில் : பழைய சோனகத் தெருவும் ; கிழக்கில் : உதுமா லெப்பே மரிக்கார் சேகடி மரிக்காரின் தோட்டமும் ; தெற்கில் : உதுமா லெப்பே மெஸ்றியாரின் தோட்டமும் ; மேற்கில் : அப்துல்புள்ளே நதிஜாவின் வீடும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எப். ரீமன்ஸ் தயாரித்த 1825, பெப்புருவரி 10 ஆந் திகதியிட்ட அளவையின்படி ஐந்து சதுர பேர்ச்சுகளும் நூறில் ஐந்து பேர்ச்சுகளும் (0ஏ. 0றூ. 05.5/100பே.) விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. மாசிலாமணி தயாரித்த 1986, சனவரி 27 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 262 இன்படி பின்வருமாறு விபரிக்கப் பட்டுள்ளது :

மேற்குறிப்பிட்டவாறு கொச்சிக்கடை தெற்கில் பழைய சோனகத் தெருவில் அமைந்த பழைய சோனகத் தெரு, முன்னர் வரிமதிப்பிலக்கம் 116 மற்றும் 110 ஐக் கொண்டதும் வரிமதிப்பிலக்கம் 84 ஐக் கொண்டதும் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 262 இல் விபரித்த துண்டு 'ஏ' என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : பழைய சோனகத் தெருவும் ; கிழக்கில் : பழைய சோனகத் தெரு, வரிமதிப்பிலக்கம் 88 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 80 ஐக் கொண்ட நிலமனையும் ; மேற்கில் : பழைய சோனகத் தெரு, வரிமதிப்பிலக்கம் 82 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 262 இன்படி எட்டு தசம் ஐந்து மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 8.53பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

டீ. கே. எஸ். மகிந்த,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சென்றல் சுப்பர் மார்க்கட் கிளை.

7-537

**சம்பத் வங்கி PLC**

(முன்னர் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி என அறியப்பட்டது.)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

கணக்கு இல. 00101000 8383-

வரையறுக்கப்பட்ட சமந்த ஜயவிக்கிரம அன்ட் கம்பனி (தனியார்) நிறுவனம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2008, ஓகத்து 28 ஆந் திகதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 610, 659, 1205, 1207,1135 மற்றும் 1153 ஆகிய பிணை முறிகள் மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியிடம் அடகு வைக்கப்பட்டதும், இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகளை ஐந்து கோடியே ஐம்பத்தி ஒரு இலட்சத்து நாற்பத்தியாறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தியொன்பது ரூபா எழுபத்தி நான்கு சதத்தை (ரூபா 55,146,959.74) அறவிடுவதற்காகவும் அத்துடன், 2008, ஏப்பிறல் 02 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை நான்கு கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து எழுபத்தைந்து ரூபா (ரூபா 40,255,075) மீது வருடாந்தம் இருபது சதவீத (20%) வட்டியும் மற்றும் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்றி ஐம்பது ரூபா (ரூபா 12,343,750) மீது வருடாந்தம் பதினொரு சதவீத (11%) வட்டித்தொகையுடன் விளம்பரங்கள் மற்றும் வேறு கட்டணங்கள் ஆகியவற்றைச் சேர்த்தும் பெறப்பட்ட எவையேனும் இருப்பின் அதனைக் கழித்தும் அறவிடுவதற்காகவும் கொழும்பிலுள்ள உரிமம் பெற்ற ஏலதாரர் சொக்மன்ட் அன்ட் சமரவிக்கிரம மூலம் 13.08.2009 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆரம்பித்து ஸ்தலத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்ற அறிவித்தல் 2009 ஆம் ஆண்டு யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானியிலும் மற்றும் 2009, பெப்புருவரி 03 ஆந் திகதியன்று வெளியான ''திவயின'' ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய தினசரிகளிலும் வெளியிடப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

**அட்டவணை**

01. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளே, தலாரம்பயில் அமைந்திருப்பதும், ''இந்திகஹவத்த'' என அழைக்கப்படுவதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஆர். குலரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003, மே 22 ஆந் திகதியிடப்பட்ட 497 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் இந்தக் காணிக்குரிய உரிமைகள், வழிவசதிகள். சலுகைகள், சௌகரியங்கள், சேவக உரிமை மற்றும் சேர்மானங்கள் என்பவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு A இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 2 ; கிழக்கில் : இதே காணியின் காணித்துண்டு 5 (8 அடி அகலப்பாதை) மற்றும் அதே காணியின் காணித்துண்டு 4C (4 அடி அகலப்பாதை) ; தெற்கில் : வரைபட இல. 244 இன் படி காணித்துண்டு 2 மற்றும் காலியிலிருந்து மாத்தறைக்கான வேகப்பாதை ; மேற்கில் : இதே காணியின் ஒரு பகுதி என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 497 இன்படி இருபத்தெட்டு தசம் மூன்று பேர்ச்சஸ்களாகும். (0ஏ.0றூ.28.3பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D860/328 இல் பதியப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட தலாரம்பயில் அமைந்திருப்பதும், ''இந்திகஹவத்த'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. சிறிவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, மாச்சு 09 ஆந் திகதியிடப்பட்ட 41/ 1988 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 05 (8 அடி அகலப் பாதை) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், சொல்லப்பட்ட காணித்துண்டு 05 இன் எல்லைகளாக வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 2 ; கிழக்கில் : இதே காணியின் காணித்துண்டு 01 ; தெற்கில் : வல்கமயிலிருந்து மாத்தறைக்கான பிரதான பாதை ; மேற்கில் : இதே காணியின் காணித்துண்டுகள் 03 மற்றும் 04 என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 41/1988 இன்படி எட்டு தசம் ஐந்து பேச்சஸ்களாகும். (0ஏ.0றூ.8.5பே.) இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் D 860/330 இல் பதியப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட தலாரம்பயில் அமைந்திருப்பதும், ''இந்திகஹ வத்தயின் காணித்துண்டு 4 இன் உப பிரிவு'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஆர். குலரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட 241 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 4 C (4 அடி அகலப்பாதை) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், சொல்லப்பட்ட காணித்துண்டு 4 C இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 3 ; கிழக்கில்: இதே காணியின் காணித்துண்டு 05 (8 அடி அகலப்பாதை) ; தெற்கில் : காலியிலிருந்து மாத்தறைக்கான பிரதான பாதை ; மேற்கில் : இதே காணியின் காணித்துண்டு 4A என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 241 இன்படி ஒன்று தசம் ஒன்பது பேர்ச்சஸ்களாகும். (0ஏ.0றூ.1.9பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D 1045/233 இல் பதியப்பட்டுள்ளது.

பிணை முறி இல. 610 இன் கீழ் அடகு வைக்கப்பட்டது.

02. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை நகர சபை மற்றும் மாத்தறை போர் கிரவெட்ஸ் எல்லைக்குட்பட்டதும், பம்புறானயில் அமைந்திருப்பதும், அனகாரிக தர்மபால மாவத்தையில் வரி மதிப்பீட்டு இலக்கங்கள் 382 மற்றும் 384 ஐ கொண்டிருப்பதும், (பழைய வரி மதிப்பீட்டு இல. 376), ''ராலஹாமினேவத்தையின் காணித்துண்டு B யின் காணித்துண்டு D அல்லது காணித்துண்டு 04 உடன் சேர்ந்திருக்கும் காணித்துண்டு 06 இன் காணித்துண்டுகள் 6D. 6E மற்றும் 6F என்பனவற்றின் இணைப்பு, ராலஹாமினேவத்தையின் காணித்துண்டு B யின் காணித்துண்டு 05, ராலஹாமினேவத்தையின் காணித்துண்டு A மற்றும் போகஹவத்தையின் ஒரு பகுதி, மகாகொரட்டுவ எனப்படும் கொடகதுறுகஹபிட்டனியவின் (அல்லது மகாகொரட்டுவ எனப்படும் கொடகதுறுகஹபிட்டனிய) காணித்துண்டு A யின் காணித்துண்டு B மற்றும் மகாகொரட்டுவ எனப்படும் கொடகதுறுகஹவத்த என்று அறியப்படும் மகாகொரட்டுவ எனப்படும் கொடகதுறுகஹயின் காணித்துண்டு A யின் காணித்துண்டு C '' என அழைக்கப்படுவதும். உரிமம் பெறற் நில அளவையாளர் பி. எம். அபயகுணவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, ஓகத்து 31 ஆந் திகதியிடப்பட்ட 231 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் இந்தக் காணிக்குரிய உரிமைகள், வழிவசதிகள், சலுகைகள், சௌகரியங்கள், சேவக உரிமை

மற்றும் சேர்மானங்கள் என்பவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 01 இன் எல்லைகளாக வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 5 ; கிழக்கில் : நகர சபை வீதி ; தெற்கில் : காணித்துண்டுகள் 6A 6B மற்றும் 6 C ; மேற்கில் : ராலஹாமினேவத்த என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 239 இன்படி இருபத்திரெண்டு தசம் எட்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ.0றூ.22.8பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A 469/207 இல் பதியப்பட்டுள்ளது.

பிணைமுறி இலக்கங்கள் 659, 1135 மற்றும் 1207 இன் கீழ் அடகு வைக்கப்பட்டது.

03. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நகர சபை மற்றும் மாத்தறை போர் கிரவெட்ஸ் எல்லைக்குட்பட்டதும், வல்கமயில் அமைந்திருப்பதும், அனகாரிக தர்மபால மாவத்தையில் வரிமதிப்பீட்டு இலக்கம் 14(1) ஐ கொண்டிருப்பதும், ''கெதரவத்த'' எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு A யின் காணித்துண்டு 4'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. எம். அபயகுணவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட 346 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித் துண்டும், (உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜே. சமரபால அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட 899 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டுகள் 4 A மற்றும் 4 B ஆகியவற்றின் இணைப்பும் மீள் அளவையுமாகும்) அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் இந்தக் காணிக்குரிய உரிமைகள், வழிவசதிகள், சலுகைகள், சௌகரியங்கள், சேவக உரிமை மற்றும் சேர்மானங்கள் என்பவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 01 இன் எல்லைகளாக : வடக்கில் : காலியிலிருந்து மாத்தறைக்கான பிரதான வீதி ; கிழக்கில் : வரைபட இல. 899 இன்படி காணித்துண்டு B , (வீடுகளுக்கான பாதை) ; தெற்கில் : வரைபட இல. 899 இன் படி காணித்துண்டு C ; மேற்கில் : இதே காணியின் காணித்துண்டுகள் 01, 02 மற்றும் 03 என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 346 இன்படி பத்து தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சஸ்களாகும். (0ஏ.0றூ.10.95பே.).

சொல்லப்பட்ட காணித்துண்டு 01 ஆனது, கீழே முழுமையாக விபரிக்கப்படும் காணித்துண்டுகள் 4A மற்றும் 4 B யின் இணைப்பாகும்.

சொல்லப்பட்ட வல்கமயில் அமைந்திருப்பதும், ''கெதரவத்த'' எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு A யின் காணித்துண்டு 4'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜே. சமரபால அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட 899 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டுகள் 4 A எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திரக்கும் சகலவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 4A இன் எல்லைகளாக வடக்கில் : காலியில் இருந்து மாத்தறைக்கான பிரதான வீதி ; கிழக்கில் இதே காணியின் காணித்துண்டு B (15 அடி அகலப் பாதை) ; தெற்கில் : கெதரவத்த எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு C ; மேற்கில் : காணித்துண்டு A யின் காணித்துண்டுகள் 2 மற்றும் 3 அத்துடன் கெதரவத்த எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு 4B என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 899 இன்படி பத்து தசம் ஆறு மூன்று பூச்சியம் பேச்சஸ்களாகும். (0ஏ.0றூ.10.630பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A499/ 199 இல் பதியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணியானது, பின்வரும் மூன்று காணித் துண்டுகளின் இணைப்பின் மீள் அளவையாகும்.

சொல்லப்பட்ட தலாரம்பயில் அமைந்திருப்பதும் "இந்திகஹவத்தயின் காணித்துண்டு 4 இன் காணித்துண்டு 4 A இன் உப பிரிவு'' என அழைக்கப்படுவதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஆர். குலரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, நவெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 244 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 4 B ; கிழக்கில் : இதே காணியின் காணித்துண்டு 2 ; தெற்கில் : காலியிலிருந்து மாத்தறைக்கான வேகப்பாதை ; மேற்கில் : இதே காணியின் ஒரு பகுதி என்பவற்றுடன் அமைந்தள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 244 இன்படி பதினைந்து பேச்சஸ்களாகும். (0ஏ.0றூ.15பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D860/320 இல் பதியப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட தலாரம்பயில் அமைந்திருப்பதும் "இந்திகஹவத்தயின் காணித்துண்டு 4 இன் உப பிரிவு'' என அழைக்கப்படுவதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டப்ளியு. ஆர். குலரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, ஒற்றோபர் 26 ஆந் திகதியிடப்பட்ட 241 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 4 B எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 4 B இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 3 ; கிழக்கில்: இதே காணியின் காணித்துண்டு 4 C (4அடி அகலப்பாதை); தெற்கில் : வரைப்பட இல. 244 இன்படி காணித்துண்டுகள் 1 மற்றும் 2; மேற்கில் : இதே காணியின் ஒரு பகுதி என்பவற்றுடன் அமைந்தள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 241 இன்படி ஐந்து தசம் ஏழு பூச்சியம் பேச்சஸ்களாகும். (0ஏ.0றூ.5.70பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் D1045/232 இல் பதியப் பட்டுள்ளது.

சொல்லப்பட்ட தலாரம்பயில் அமைந்திருப்பதும் "இந்திகஹவத்த'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. சிறிவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1988, மாச்சு 09 ஆந் திகதியிடப்பட்ட 41/ 1988 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 03 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 03 இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 2 ; கிழக்கில் : இதே காணியின் காணித்துண்டு 5 (8 அடி அகலப் பாதை) ; தெற்கில் : இதே காணியின் காணித்துண்டு 4B ; மேற்கில் : இதே காணியின் ஒரு பகுதி என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 41/ 1988 இன்படி ஒரு றூட் மற்றும் ஏழு தசம் ஆறு பூச்சியம் பேச்சஸ்களாகும். (0ஏ.1றூ.7.60பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் D860/ 311 இல் பதியப்பட்டுள்ளது.

பின்வருனவற்றின் மீதானதும் ஊடானதுமான பாதை உரிமையுடன்:-

சொல்லப்பட்ட வல்கமயில் அமைந்திருப்பதும் ''கெதரவத்த'' எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு A யின் காணித்துண்டு 4'' என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நில அளவையாளர்

*எச். ஜே. சமரபால அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, ஒகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட 899 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 4B எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப் பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 4B இன் எல்லைகளாக : வடக்கில் : இதே காணியின் காணித்துண்டு 2 ; கிழக்கில் : இதே காணியின் காணித்துண்டு 4A ; தெற்கில் : கெதரவத்த எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு C ; மேற்கில் : கெதரவத்த எனப்படும் அத்தலைவத்தையின் காணித்துண்டு A யின் காணித்துண்டு 01 என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 899 இன்படி ஒரு பேர்ச் ஆகும். (0ஏ.0றூ.1பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A499/200 இல் பதியப்பட்டுள்ளது.*

*பிணை முறி இல. 1205 இன் கீழ் அடகு வைக்கப்பட்டது.*

*4. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை நகர சபை மற்றும் மாத்தறை போர் கிரவெட்ஸ் எல்லைக்குட்பட்டதும், ஹித்தெட்யவில் அமைந்திருப்பதும், மீரா வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் 83 ஐ கொண்டிருப்பதும், இஸ்ஸதீன் நகர் எனப்படும் "கஹம்பாலே குருந்துவத்த" என அழைக்கப்படுவம், உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. எம். அபயகுணவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004, ஏப்பிறல் 04 ஆந் திகதியிடப்பட்ட 280 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 01 (உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ. அத்தநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1987 மாச்சு 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1000 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 20 இன் மீள அளவையாகும்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும், அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் இந்தக் காணிக்குரிய உரிமைகள், வழிவசதிகள், சலுகைகள், சௌகரியங்கள், சேவக உரிமை மற்றும் சேர்மானங்கள் என்பவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 01 இன் எல்லைகளாக வடக்கில் : மீரா வீதி ; கிழக்கில் : வரைபட இல. 1230 இன்படி காணித்துண்டு 18, (வரி மதிப்பீட்டு இல. 79) ; தெற்கில் : வீதிக்கான ஒதுக்கம் (10 அடி அகலப்பாதை) ; மேற்கில் : வரைபட இல. 1230 இன்படி காணித்துண்டு 22 (வரிமதிப்பீட்டு இல. 87) என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 280 இன்படி ஒரு றூட் மற்றும் எட்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ.1றூ.8பே.). இக்காணி மாத்தறை காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் A 467/50 இல் பதியப்பட்டுள்ளது.*

*பிணைமுறி இல. 1153 இன் கீழ் அடகு வைக்கப்பட்டது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனி செயலாளர்.*

7-555

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***(1) பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, தாஸிய பற்று, தொரணகொடவில் அமைந்துள்ளதும், "கொஸ்கஹவத்தே கெபெல்ல மற்றும் தெல்கஹவத்த என்ற கொஸ்கஹலந்த" என அழைக்கப் படும் காணியின் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. ஏ. எஸ். பத்மினி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2004.11.15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4648 இல் குறிப்பிடப்பட்ட துண்டு ஏ மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1995.02.23 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 691 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 4 இன் ஒன்றிணைப்பாக இருக்கின்ற) உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. பீ. என். ஜயசுந்தர அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005.05.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5072 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டது மான காணியினது);***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 9.6பே.)***

***(2) பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குறு கோறளை, தாஸிய பற்று, தொரணகொடவில் அமைந் துள்ளதும், "தெல்கஹவத்த என்ற கொஸ்கஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1995.02.23 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 691 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது);***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15.50பே.)***

***(3) பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குறு கோறளை, தாஸிய பற்று, தொரணகொடவில் அமைந் துள்ளதும், "தெல்கஹவத்த என்ற கொஸ்கஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1995.02.23 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 691 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 6 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது);***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15.06பே.)***

**ஏலவிற்பனை**

*(கம்லத் ராலலாகே நிமலசேன கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. கே. என். பீ. விதான அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, ஒகத்து 6 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 6995 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

*பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, ஒகத்து 04 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.*** *- 2009.07.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.07.09 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைளையும் பார்க்கவும்.*

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.*** *- கம்பஹாவிலிருந்து மினுவங்கொடை வீதி வழியே உடுகம்பளை சந்தி வரை அண்ணளவாக 4 கி. மீ. சென்று வலப்பக்கம் திரும்பி, 2 ஆவது கி. மீ. கல்லிற்கு எதிரே அமைந்துள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு நைவல வீதி வழியே அண்ணளவாக 2 கி. மீ. செல்லவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு செலுத்தப்பட வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;
(4) மொத்த விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். :

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேட்ட முகாமையாளர் - சட்டசம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பிடுநர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே,
தொலைபேசி இல. : 2873656
0777 672082
தொலைநகல் : 2871184

7-568

## திருத்தம்

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

2009.07.10 ஆந் திகதிய 1610 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கொழும்பு மாவட்டம், பொரலஸ்கமுவை கிராமம், அபேரத்ன மாவத்தை, வரிமதிப்பு இல. 61/46/O ஐக் கொண்ட "ஹின்ன ஓவிட்ட" என அழைக்கப்படும் காணியின் ஏலவிற்பனை அறிவித்தலின் 4 ஆம் பந்தி கீழே குறிப்பிடப்பட்டவாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்:-

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2009.07.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.07.06 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் 2009.07.04 ஆந் திகதிய "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.

7-664